# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**இந்திய வீடமைப்புத் திட்டத்தின் நான்காவது கட்டத்தின் இரண்டாவது தொகுதி ஆரம்பம்**

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டத்தின் கீழான இரண்டாவது தொகுதி 2025 ஒக்டோபர் 12 ஆம் திகதி பண்டாரவளை மாநகர சபை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், இந்நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் கௌரவ சமந்த வித்யாரத்ன, மீன்பிடி, நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் கௌரவ இராமலிங்கம் சந்திரசேகர், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப், சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் கௌரவ ருவான் ரணசிங்கே, இளைஞர் விவகார பிரதி அமைச்சர் கௌரவ டினிது சமன் குமார, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் கௌரவ ஆளுநர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், பெருந்தோட்ட மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் மற்றும் சிரேஸ்ட அதிகாரிகள், மேயர்கள், பெருந்தோட்ட மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் சிரேஸ்ட அதிகாரிகள், மற்றும் ஏனைய பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர்.

2. இந்தியாவால் வெளிநாடுகளில் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தி திட்டங்களில் இந்திய வீடமைப்புத் திட்டமும் ஒன்றாகும். 18 பில்லியன் இந்திய ரூபா நன்கொடையின் கீழ் இலங்கை பயனாளிகளுக்காக 60000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான இந்திய அரசாங்கத்தின் ஒட்டுமொத்த உறுதிப்பாட்டினை இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. இந்த திட்டத்தின் முதலிரு கட்டங்களின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மொத்தமாக 46000 வீடுகள் நிர்மாணமும் புனரமைப்பும் செய்யப்பட்டன. மூன்றாவது கட்டம் பெருந்தோட்ட பிராந்தியங்களில் 4000 வீடுகளை உள்ளட்டக்கியிருக்கும் அதேவேளை அத்திட்டம் நிறைவடையும் நிலையில் உள்ளது.

3. நான்காவது கட்டம் 2017 ஆம் ஆண்டில் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் அறிவிக்கப்பட்டதுடன் பெருந்தோட்ட சமூகங்களுக்கான மற்றொரு 10000 வீடுகளை உள்ளடக்கியுள்ளது. இதில் முதலாவது கட்டத்தின் கீழான 1300 வீடுகள் நிறைவடையும் பல்வேறு நிலைகளில் உள்ளன.

4. ஒக்டோபர் 12 ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்ட இரண்டாவது தொகுதியின் கீழ் 4700 பயனாளிகளை உள்வாங்க இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதில் கிட்டத்தட்ட 2000 பயனாளிகளுக்கு இந்நிகழ்வின்போது வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான காணிகளை வழங்குதல், தொடர்புடைய அனுமதிகளை வழங்குதல், வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் மற்றும் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழான பயனாளிகளைத் தீர்மானித்தல் மற்றும் அனுமதியளித்தல் ஆகிய பொறுப்புகள் இலங்கை அரசாங்கத்தையே சார்ந்ததாகும்.

5. இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய அதி மேதகு ஜனாதிபதி திசாநாயக்க அவர்கள், இந்திய வீடமைப்புத் திட்டம் போன்ற பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் ஊடாக இலங்கை மக்களின் பொருளாதார மற்றும் சமூக நலன்களை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தால் தொடர்ச்சியாக வழங்கப்படும் ஆதரவுக்காக இந்திய மக்களுக்கும் பிரதமருக்கும் நன்றியினைத் தெரிவித்திருந்தார். இதேவேளை உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் உரை நிகழ்த்தும்போது, இந்திய வீடமைப்புத் திட்டத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்படும் 14000 வீடுகள் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தை மேம்படுத்துவதற்காகவும் வலுவூட்டுவதற்காகவும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான இந்தியாவின் ஆணித்தரமான உறுதிப்பாட்டினை பிரதிபலிக்கின்றது எனக் குறிப்பிட்டார். வீடமைப்புத் திட்டத்துக்கு மேலதிகமாக, இச்சமூகத்தினர் இலங்கைக்கு வருகைதந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்தமையினை குறிக்கும் முகமாக 2023 ஜூலையில் அறிவிக்கப்பட்ட இந்திய ரூபா 750மில்லியன் பெறுமதியான விசேட பொதியின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் உட்பட, பெருந்தோட்ட பிராந்தியங்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் உயர் ஸ்தானிகர் சுட்டிக்காட்டியிருந்தார்.

************

**கொழும்பு**
**12 ஒக்டோபர் 2025**